உ

அருள்மிகு இராசாசுவாமி நல்லமங்கையம்மன் துணை



## காலிங்கராயன் விழா

# தென்முகம் வெள்ளோடு சாத்தந்தைகுல தெய்வம்
# அருள்மிகு இராசாசுவாமி நல்லமங்கையம்மன் திருக்கோயில்
# குடமுழுக்கு 2-ம் ஆண்டு நிறைவு விழா

## அருள்மிகு கருப்பண்ணன் சுவாமி, அருள்மிகு கன்னிமார் சுவாமி,
## அருள்மிகு தொரட்டியம்மன், கோயில் ஆத்தா அய்யன்,
## அருள்மிகு சாம்புவன் திருக்கோயில்கள்

# குடமுழுக்கு விழா அழைப்பிதழ்

**ஹேவிளம்பி ஆண்டு தை மாதம் 6-ம் நாள் (19.01.2018) வெள்ளிக்கிழமை**



# காலிங்கராயன் விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

737 ஆண்டுகளுக்கு முன்பு வானிதனில் அணைகண்ட நமது சாத்தந்தைகுல வள்ளல் காலிங்கராயன் அவர்கள் கால்வாயை பாசனத்திற்கு அர்ப்பணித்த தினம் தை மாதம் 5-ஆம் நாள் (18.01.2018) வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு நமது நற்பணி மன்றத்தின் சார்பில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்விக்க உள்ளோம். நமது பங்காளிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவண்,

**தென்முகம் வெள்ளோடு சாத்தந்தைகுலம்**
**இராசாசுவாமி நற்பணி மன்றம்**

உலகபுரம், கனகபுரம், தேவபுரம் கரை காணியாளர்கள்



## தென்முகம் வெள்ளோடு சாத்தந்தைகுல தெய்வம்
## அருள்மிகு இராசாசுவாமி நல்லமங்கையம்மன் திருக்கோயில்
## குடமுழுக்கு 2-ம் ஆண்டு நிறைவு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நமது குல தெய்வம் அருள்மிகு இராசாசுவாமி நல்லமங்கையம்மன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்று 2-ம் ஆண்டு நிறைவு விழா கீழ்க்கண்ட நிகழ்வு முறைப்படி நடைபெறவுள்ளது. அது சமயம் நமது குலப்பெருமக்கள் அனைவரும் குடும்பத்தோடும், சுற்றத்தோடும் கலந்துகொண்டு குலதெய்வ அருள்பெற வேண்டுகிறோம்.

### நிகழ்வுமுறை

**19.01.2018 தை மாதம் 6-ம் நாள் வெள்ளிக்கிழமை**

காலை 8.00 மணிக்கு - அபிசேகம்

காலை 9.00 மணிக்கு - தீபாராதனை

இவண்,

**தென்முகம் வெள்ளோடு சாத்தந்தைகுலம்**
**இராசாசுவாமி நற்பணி மன்றம்**

உலகபுரம், கனகபுரம், தேவபுரம் கரை காணியாளர்கள்

அனைவரும் வருக ! குல தெய்வ அருள் பெறுக !!

உ

# அருள்மிகு கருப்பண்ணன் சுவாமி, அருள்மிகு கன்னிமார் சுவாமி, அருள்மிகு தொரட்டியம்மன், கோயில் ஆத்தா அய்யன், அருள்மிகு சாம்புவன் திருக்கோயில்கள்

## குடமுழுக்கு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி ஆண்டு தை மாதம் 6-ம் நாள் 19.01.2018 வெள்ளிக்கிழமை துவிதியை திதி அவிட்ட நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 08.00 மணிக்குமேல் 09.00 மணிக்குள் கும்ப லக்கினத்தில் நமது குல தெய்வம் அருள்மிகு இராசாசுவாமி நல்லமங்கையம்மன் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பரிவார தெய்வங்களான அருள்மிகு கருப்பண்ணன்சுவாமி, அருள்மிகு கன்னிமார்சுவாமி, அருள்மிகு தொரட்டியம்மன், கோயில் ஆத்தா அய்யன், அருள்மிகு சாம்புவன் ஆகிய தெய்வங்களுக்கு புதிதாக கட்டியிருக்கும் திருக்கோயில்களுக்கு கீழ்க்கண்ட நிகழ்வு முறைப்படி குடமுழுக்கு விழா நடைபெறவுள்ளது. அதுசமயம் அனைவரும் குடும்பத்துடன் வருகைபுரிந்து அருள்பெற வேண்டுகிறோம்.

### நிகழ்வு முறை

| | |
|---|---|
| **ஹேவிளம்பி ஆண்டு தை மாதம் 5-ம் நாள் (18.01.2018) வியாழக்கிழமை** | |
| காலை 10.30 மணிக்கு | தீர்த்தம் எடுத்துவர காவிரிக்கு செல்லுதல் |
| மாலை 6.00 மணிக்கு மேல் | அருள்மிகு விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், வாஸ்து சாந்தி, கங்கணம் கட்டுதல், கும்ப அலங்காரம், யாக சாலை பிரவேசம், துவார பூசை, வேதிகார்ச்சனை, முதல் கால யாக வேள்வி, திரவிய ஹோமங்கள் பூர்ணாகுதி, பிரசாதம் வழங்குதல். |
| இரவு 09.00 மணிக்குமேல் | புதிய சிலைகள் கண்திறந்து சயனாதிவாசம் செய்தல், பீடத்தில் யந்திரம் வைத்து அஷ்டபந்தன மருந்து சாத்துதல். |
| **ஹேவிளம்பி ஆண்டு தை மாதம் 6-ம் நாள் (19.01.2018) வெள்ளிக்கிழமை** | |
| காலை 6.00 மணிக்குமேல் | அருள்மிகு விநாயகர் வழிபாடு, புண்யாகம், ரக்ஷாபந்தனம், ஸ்பர்சாகுதி, திரவிய ஹோமங்கள் பூர்ணாகுதி. |
| காலை 7.30 மணிக்குமேல் | கடம் புறப்பாடு |
| காலை 8.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள் | அருள்மிகு கருப்பண்ணன்சுவாமி, அருள்மிகு கன்னிமார் சுவாமி , அருள்மிகு தொரட்டியம்மன், கோயில் ஆத்தா அய்யன், அருள்மிகு சாம்புவன் ஆகிய தெய்வங்களுக்கு திருக்குட நன்னீராட்டுதல், மகா அபிசேகம், தசதரிசனம், மகா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |

அனைவரும் வருக ! குல தெய்வ அருள் பெறுக !!

இவண்,

**தென்முகம் வெள்ளோடு சாத்தந்தைகுலம்**
**இராசாசுவாமி நற்பணி மன்றம்**
உலகபுரம், கனகபுரம், தேவபுரம் கரை காணியாளர்கள்

## அன்னதானம்

தை மாதம் 5-ம் நாள் (18.01.2018) வியாழக்கிழமை மதியம் முதல்
தை மாதம் 6-ம் நாள் (19.01.2018) வெள்ளிக்கிழமை மதியம் வரை அன்னதானம் நடைபெறும்

## மண்டலாபிசேக பூசைகள்

ஹேவிளம்பி ஆண்டு தை மாதம் 7-ம் நாள் (20.01.2018) சனிக்கிழமை முதல்
தை மாதம் 18-ம் நாள் (31.01.2018) புதன்கிழமை வரை 12 நாட்கள் மதியம் 11.00 மணிக்கு
மண்டலாபிசேக பூசைகள் நடைபெறும்.

## ஹேவிளம்பி ஆண்டு அமாவாசை பூசை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| தை | 3 | 16.01.2018 | செவ்வாய்க்கிழமை |
| மாசி | 3 | 15.02.2018 | வியாழக்கிழமை |
| பங்குனி | 3 | 17.03.2018 | சனிக்கிழமை |

## அமாவாசை நிகழ்வு முறை

காலை 05.30 மணி - **அபிசேகம்**
காலை 07.00 மணி - **தீபாராதனை**
காலை 07.15 மணி - **அன்னதானம்**

நமது குலம் நன்கு சீரோடும் சிறப்போடும் வாழவேண்டும் என்று நமது முன்னோர் வேண்டி வழிபட்ட எண்ண அலைகள் குலதெய்வமண்ணில் இருப்பதால் குலதெய்வ வழிபாடே அனைத்து வழிபாடுகளிலும் சாலச் சிறந்ததாகும்.

ஆதித்யா, ஈரோடு. 98427 19819 / 98420 35464